## அன்பானவர்களே…

கிறிஸ்துவுக்குள் எனக்கு அன்பான சகோதர சகோதரிகளே பிள்ளைகளே உங்கள் அனைவருக்கும் இயேசுக் கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எங்களது வாழ்த்துக்கள்.

கர்த்தரின் பெரிதான கிருபையினாலே நாம் ஒரு மாதத்தை முடித்து புதிய மாதத்திற்குள்ளாக பிரவேசித்திருக்கிறோம். கடந்த மாதம் நடந்த ஆராதனைகளை எல்லாம் ஆசீர்வதித்து நமக்கு தேவையான செய்திகளைத் தந்து அன்பு உறவுகளை வலுப்படுத்தி நடத்தினபடியால் நான் தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன். அது மட்டுமின்றி சரீர பிரகாரமான சுகத்தையும், வாழ்விற்கு செழிப்பையும், புதிய ஆசீர்வாதங்களையும் தந்தபடியாலும் நம்மை கண்மணி போல பாதுகாத்து நடத்தினபடியினாலும் எல்லாம் வல்ல தேவனுக்கு நன்றிகளை ஏறெடுக்கிறேன்.

கடந்த மே மாதத்தோடு தனது ஊழியத்தை நமது சபையிலே நிறைவேற்றி நமது தாய் தேசத்தில் தமது ஊழியத்தைத் தொடரும் வண்ணமாக Rev. Davidson Paul Jacob இந்தியா சென்றிருக்கிறார்கள். அவர்கட்கும் அவர்கள் குடும்பத்திற்கும் நமது சபையின் சார்பில் நன்றிகளைக் கூறுவோம். அவர்கட்கு மாற்றாக Rev. M. Christopher Rajendran அவர்களை நமது சபையின் ஊழியத்தை தொடரும் வண்ணமாக இம்மாதம் முதல் நியமித்திருக்கிறார்கள். ஏற்ற வேளையிலே தேவன் அவர்களை இங்கு அழைத்து வரவும், அதற்கான எல்லா ஏற்பாடுகளும் கிரமமாக செய்து முடிக்கப்படவும் உதவி புரிம் படியாகவும் ஜெபிப்போம்.

கர்த்தர் தாமே நம்மையும் நம் திருச்சபையையும் ஆசீர் வதித்து வழி நடத்தும் படியாய் ஜெபிப்போம்.

கிறிஸ்துவின் அன்பில்

D.ராஜவேல்
உப தலைவர்

# இறைச் செய்தி ...

**“ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப் பட்டிருக்கிறார்க்களோ, அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவ ஞானமுமாயிருக்க்கிறார்”.(2 கொரி 1:24)**

மனிதன் தன் புத்தியோம், திறமையோடும் நடந்து வெற்றியுள்ள வாழ்க்கை நடத்துவதை ஞானம் என்பர். திருமறையில் சாலமோனின் ஞானம் எல்லா வகை ஞானத்திலும் சிறந்து விளங்கியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது (1இரா 5:10-34, 10:6, 23). இங்கு சாலமோனின் ஆள் தத்துவமும் நல்ல ஆட்சி அமைக்கும் பண்பும் குறிக்கப்பட்டிருக்கிறது. முனித வாழ்வும் சமூக உறவுகளும் தொடர்பு படுத்தப்படும் வழியாகவே வாழ்வின் ஞானம் வெளிப்படுகிறது. பவுலடிகளார் தீமோத்தேயுக்கு எழுதுகையில் இரட்சிப்புக் கேற்ற ஞானம் என்றும் (2 தீமோ.3:15), கொரிந்து திருச்சபைக்கு எழுதும் கடிதத்தில் உலகத்து பிரபுக்களுடைய அழிவிற்க்குரிய ஞானம் எனவும் (1கொரி 2:6), ஆதி முதல் கடவுள் மகிமைக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள தேவஞானம் (1 கொரி 2:7) எனவும் கூறுகிறார். மனித எல்லைக்குட்பட்டு மனித தன்மையில் சிந்திக்காது, கடவுளின் திட்டத்திற்குட்பட்டு கடவுள் மனநிலையோடு சிந்திப்பதே தேவ ஞானம் ஆகும்.

உலகப் பார்வையில் சிலுவை மனிதர் எவரும் ஏற்க முன்வராததும் மன்னிக்க முடியாத குற்றவாளிகளின் கொடூரமான கொலைக் கருவி யுமாக காணப்பட்டது. சிலுவை மரணம் இழிவானது எண்ணப்பட்டது. சிலுவையில் அறையப்பட்டவன் சபிக்கப்பட்டவன் என அன்றைய உலகு எண்ணியது. சிலுவை மரணம் கடவுளால் தமக்கு வழங்கப்பட்டது என அறிந்து கிறிஸ்து நாதர் மனப்பூர்வமாக அதை தெரிவு செய்தார். அவர் சுமையாக அன்றி சுவையாகவே சிலுவையை ஏற்றுக் கொண்டார்.

**இறைவனோடு இணைக்கும் சிலுவை (1 கொரி. 1:9)**

கிறிஸ்துவின் உயர்ந்த மனப்பான்மை சிலுவையில் தெளிவாக்கப் பட்டுள்ளது. அனைத்து நிலைகளிலும் தாம் கடவுளோடு ஒன்று பட்டவர் என்பதைக் கிறிஸ்து சிலுவையில் வெளிப்படுத்தினார். இன்பத்தில் மட்டும் ஒன்றுபடுதலை விட்டு துன்பத்திலும் ஒன்றித்து நிற்பதே அன்பின் உயர் நிலை. உண்மையான அன்பு எப்போதும் பிறருக்காக துன்புறும்

அன்பாகவே செயல்படும். இந்த அன்பை சிலுவையில் காண்கிறோம். சிலுவையில் துன்பங்களுக்கு தம்மை முழுமையுடன் ஒப்படைத்து, இனிய முகத்துடன் தாமாகவே துன்பத்தை ஏற்றுக் கொள்வதில் தான் இரட்சிப்புக்கேற்ற ஞானம் வெளிப்படுகிறது என்பதை கிறிஸ்து நமக்குத் தெளிவு படுத்தினார். தம் வாழ்வுக்காக மனிதன் என்றும் பாராமல் பிறரை அழித்து ஒழித்துவிடும் உலகில், பிறருக்காக குறிப்பாகத் தம்மை இகழ்வோர், தம்மை இம்சிப்போர், தம்மைத் தாக்குவோர் இவர்களுக் காகவும் மன நிறைவோடு சிலுவையில் துன்பம் ஏற்ற இறைவனில் தெய்வீக ஞானத்தை நம்மால் தரிசிக்கமுடியும். பிறர் துயரத்தை தமதாக்க நினைக்கும் கிறிஸ்தவ மனநிலையினை சிலுவை நமக்குப் பகிர்கிறது. பாடுகளை ஏற்கத் தயங்கும் மன நிலை கிறிஸ்துவின் மன நிலைக்கு புறம்பானது. **“The Cross is not to wear but to bear”** எனும் அனுபவத் தோடு ஏற்கும் பாடுகள் நமக்கு சுவையானது. இப்பேர்பட்ட பாடுகளின் வழியாகவே நாம் கடவுளோடு உறவு கொள்ளுகிறோம் என்பதை உணர்ந்து செயல்படுவோமானால் இவ்வுலக வாழ்வு நமக்கு மகிழ்வு தரும் வாழ்வாக அமையும். (1பேதுரு 4:13, 14)


**இறைவனின் ஆற்ற்றலைக் காணும் இடம் சிலுவை (1 கொரி 1:27)**

கள்ளர்களைச் சிலுவையில் அடித்து துன்புறுத்தி கொலை செய்வார்கள். தோல்வியின் சின்னமாம் சிலுவையினை தேவனுடைய வல்லமை விளங்கும் சின்னமாக இயேசு மாற்றினார். அரசு அதிகாரங்களும், ஆதிக்கங்களும் ஒன்றாக இணைந்து ஆயத்தம் பண் ணின சிலுவையில் (மாற்கு. 3:6) இயேசு இந்த அணைத்து ஆற்றல் களையும் தோல்வியுறச் செய்தார். தம் ஜீவனை யாராலும் அழிக்க முடியாது என்பதனை சிலுவையில் பகிரங்கமாக வெளிப்படுத்தினார். (மாற்கு 14:37) தெய்வீக வல்லமை என்பது மனித பெலவீனங்களிலும், முழமையான ஒப்படைத்தலிலும் வெளிப்படும். எனவே பாடுகளை நாம் இறுதி வரை சகிக்க வேண்டும். சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை உலகுக்கு அறிமுகப்படுத்த தம்மையே வெறுத்து விட்ட திருச்சபைகள் இன்று தேவை.. இதனையே பவுலடிகளார் **“அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ள்ள வனாயிருக்க்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்”**(2கொரி. 12:10) என்கிறார்.

இழிவான ஈனச் சிலுவை தான் மானிடர்க்கு மீட்பு வழங்கும் இடமாயிற்று. இந்த மீட்பு கிறிஸ்துவின் பாடு, வேதனை மிகுந்த அவரது மரணம் இவற்றில் வழியாகவே உலகிற்கு அறிமுகம் செய்யப்பட்டது. எனவே நாமும் அவருக்கென ஏற்கும் பாடுகள் வழியாய் கடவுளின் பெரிய வல்லமையை வெளிப்படுத்துவோம். ஆலய பீடத்திற்குள்ளும், ஆலய கோபுரத்திலும் அலங்கரித்து வைக்கும் சின்னமாய் சிலுவையைப் பாராமல் பாடுபடும் மக்களோடு இணைத்துப் பார்க்கும் சின்னமாக சிலுவையைக் காண்போம். அதன் ஆற்றலைக் கண்டடைவோம். சிலுவையில் பகிரப்படும் இறை உறவும், சிலுவையில் வெளிப்படும் இறை ஆற்றலும் நம்மை கடவுளுடன் உறுதிப்படுத்தும். பாடுகளின் வழியாக அவரோடிணைந்து தேவ சித்தத்தை தொடர்ந்து நிறைவு செய்வோம்.

இறை ஆசி நம் அனைவரோடுமிருப்பபதாக. ஆமென்.

-



## *செயலரிடமிருந்து.......*

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் அன்பான உடன் விசுவாசிகளே, இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன். கடந்த ஒரு மாத காலமாக தேவனுடைய கிருபை நம்மோடிருந்து நம்மை ஆசீர்வதித்து வழி நடத்தி இந்த புதிய மாதத்தை காணச்செய்த தயவை நினைத்து நம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து தேவனுக்கு துதி செலுத்துவோம்.

கடந்த மே மாதத்தோடு தனது ஊழியத்தை நமது சபையிலே நிறைவேற்றி நமது தாய் தேசத்தில் தமது ஊழியத்தைத் தொடரும் வண்ணமாக இந்தியா சென்றிருக்கும் நமது போதகர் Rev. Davidson Paul Jacob அவர்கட்காக, அவர்கள் குடும்பத்திற்காக ஜெபிப்போம். கடந்த மூன்று வருடங்களாக நம் மத்தியிலே அவர்கள் செய்து வந்த ஊழியங்கட்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

மேலும் அடுத்த மூன்று வருட ஊழியத்திற்காக நம் மத்தியிலே வர இருக்கும் புதிய போதகர். கிறிஸ்டோபர் ராஜேந்திரன் (Rev. M. Christopher Rajendran) அவர்கட்காகவும், அவர்கள் குடும்பத்திற்காகவும் ஜெபிப்போம். ஏற்ற வேளையிலே அவர்கள் இந்த இடத்திலே வந்து தங்கள் ஊழியத்தைத் துவங்குவதற்கான எல்லா காரியங்களையும் கர்த்தர் அனுகூலமாக்கித் தருவார் என்று விசுவாசிக்கின்றேன். நாம் யாவரும் சபையாக இணைந்து இந்த காரியங்கட்காக ஜெபிப்போம்.

கடந்த 12-05-17 வெள்ளிக்கிழமை மாலை ஆராதனையில் நமக்கு சிறப்புச் செய்தி யினை பகிர்ந்தளித்த நமது திருச்சபையின செயற்குழு அங்கத்தினரான திரு. ஹெர்சில் அவர்களது தந்தையார் Rev. ஆல்பர்ட் கெர்சோன் (Rev. Albert Gershon) அவர்கட்கும் நமது திருச்சபையின் சார்பில் நன்றிகளை கூறுவோம்.

மேலும் கடந்த 26-05-17 வெள்ளி ஆராதனை பெண்கள் சிறப்பு ஆராதனையாக நடைபெற தேவன் கிருபை புரிந்தார். அந்த ஆராதனையிலே சிறப்பு செய்தி தந்த Rev. ஒலிம்பா வாசகன் (Rev. Olimba Vasagan) அவர்கட்கும், அன்றய ஆராதனையில் அவர்களோடு

நமது ஆராதனையில் பங்கு கொண்ட Rev. ஜெப வாசகன் (Rev.Jebavasagan) UAQ போதகர், அவர்கட்கும் நமது திருச்சபையின் சார்பில் நன்றி கூறுகிறேன். அவாகள் பெண்களுக்காக அன்றய தினம் தந்த செய்தி பெண்கள் ஒவ்வொருவருடைய வாழ்விற்கும் நல் ஆலோசனையாக அமைந்திருக்கும் என்று நம்புகிறேன்.

தொடர்ந்து வரும் நாட்களில் திருச்சபையின் வளர்ச்சிக்காக செயல் படுத்தும் ஒவ்வொரு காரியங்களிலும் நாம் யாவரும் உற்சாகத்தோடும், ஜெபத்தோடும் பங்கு பெறுவோம், செயல்படுவோம். தேவன் தாமே நம்மையும் நம் திருச்சபையையும் ஆசீர்வாதத்தின் பாதையில் வழி நடத்துவாராக.

*M. நேசமணி*

# A Call to the Youth

God wants the youth to become men of earnest mind, to be prepared for action in His noble work, and fitted to bear responsibilities. God calls for young men with hearts uncorrupted, strong and brave, and determined to fight manfully in the struggle before them, that they may glorify God, and bless humanity. If the youth would but make the Bible their study, would but calm their impetuous desires, and listen to the voice of their Creator and Redeemer, they would not only be at peace with God, but would find themselves ennobled and elevated. It will be for your eternal interest, my young friend, to give heed to the instructions in the word of God, for they are of inestimable importance to you.

Christianity entreat you to be wise, and consider what will be the result of leading a wild life, uncontrolled by the

Spirit of God. “Be not deceived; God is not mocked: for whatsoever a man soweth, that shall he also reap. For he that soweth to his flesh shall of the flesh reap corruption.” For your soul’s sake, for Christ’s sake, who gave Himself to save you from ruin, pause on the threshold of your life, and weigh well your responsibilities, your opportunities, your possibilities. God has given you an opportunity to fill a high destiny. Your influence may tell for the truth of God; you may be a co-laborer with God in the great work of human redemption....

O those young men might appreciate the high destiny to which they are called! Ponder well the paths of your feet. Begin your work with high and holy purpose, and be determined that through the power of the grace of God, you will not diverge from the path of rectitude. If you begin to go in a wrong direction, every step will be fraught with peril and disaster, and you will go on straying from the path of truth, safety, and success. You need your intellect strengthened, your moral energies quickened, by divine power.

The cause of God demands the highest powers of the being, and there is urgent need in many fields for young men of literary qualifications. There is need of men who can be trusted to labor in extensive fields that are now white to the harvest. Young men of ordinary ability, who give themselves wholly to God, who are uncorrupted by vice and impurity, will be successful, and will be enabled to do a great work for God. Let young men heed the admonition, and be sober-

minded. How many youth have wasted their God-given strength in folly and dissipation! How many painful histories rise before me of youth who have become mere wrecks of humanity, mentally, morally, physically, because of indulgence in vicious habits! Their constitutions are ruined, their life usefulness greatly impaired, because of indulgence in unlawful pleasures. I entreat of you, careless, reckless youth of today, be converted, and become laborers together with God. Let it be the study of your life to bless and save others. If you seek help from God, His power working in you will bring to naught all opposing powers, and you will become sanctified through the truth. Sin is alarmingly prevalent among the youth of today, but let it be your purpose to do what you can to rescue souls from the power of Satan.

Carry light wherever you go; show that you have strength of purpose, that you are not a person of indecision, easily swayed by the persuasions of evil associates. Do not yield a ready assent to the suggestions of those who dishonor God, but rather seek to reform, reclaim, and rescue souls from evil. Resort to prayer, persuade in meekness and lowliness of spirit those who oppose themselves. One soul saved from error, and brought under the banner of Christ, will cause joy in heaven, and place a star in your crown of rejoicing. A soul saved will, through his godly influence, bring other souls to a knowledge of salvation, and thus the work will multiply, and only the revealings of the day of judgment will make manifest the extent of the work.


Do not hesitate to work for the Lord because you think you can do but little. Do your little with fidelity; for God will work with your efforts. He will write your name in the book of life as one worthy to enter into the joy of the Lord. Let us earnestly entreat the Lord that laborers may be raised up, for the fields are white to the harvest; the harvest is great, and the laborers are few....

Young men should have broad ideas, wise plans, that they may make the most of their opportunities, catch the inspiration and courage that animated the apostles. John says, "I have written unto you, young men, because ye are strong, and the word of God abideth in you, and ye have overcome the wicked one." An elevated standard is presented before the youth, and God is inviting them to come into real service for Him. True-hearted young men who delight to be learners in the school of Christ, can do a great work for the Master, if they will only give heed to the command of the Captain as it sounds down along the lines to our time, "Quit you like men, be strong" You are to be men who will walk humbly with God, who will stand before Him in your God-given manhood, free from impurity, free from all contamination from the sensuality that is corrupting this age. You must be men who will despise all falsity and wickedness, who will dare to be true and brave, holding aloft the blood-stained banner of Prince Emmanuel. Your talents will increase as you use them for the Master, and they will be esteemed precious by Him who has bought them with an infinite price. Do not sit down and neglect to do anything,

simply because you cannot do some great thing, but do whatever your hands find to do, with thoroughness and energy.... .

Christ is calling for volunteers to enlist under His standard, and bear the banner of the cross before the world. The church is languishing for the help of young men who will bear a courageous testimony, who will with their ardent zeal stir up the sluggish energies of God's people, and so increase the power of the church in the world. Young men are wanted who will resist the tide of worldliness, and lift a voice of warning against taking the first steps in immorality and vice. But first the young men who would serve God, and give themselves to His work, must cleanse the soul temple of all impurity, and enthrone Christ in the heart; then they will be enabled to put energy into their Christian effort, and will manifest enthusiastic zeal in persuading men to be reconciled to Christ. Will not our young men respond to the invitation of Christ, and answer, "Here am I; send me"? Young men, press to the front, and identify yourselves as laborers together with Christ, taking up the work where He left it, to carry it on to its completion.

*Compiled*



# Children's Page

## Bible Wordsearch

More puzzles at: biblewordgames.com

Fit the words in the list into the diagram below reading forward, backward, up, down, diagonally, always in a straight line.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| N | I | A | R | P | R | O | P | H | E | T | S | Y | D | H |
| O | L | E | M | R | A | C | O | W | A | T | E | R | U | E |
| H | E | A | B | R | A | H | A | M | N | U | H | N | O | V |
| S | A | C | R | I | F | I | C | E | S | A | D | V | L | A |
| I | P | E | U | B | S | L | M | A | W | R | T | O | C | C |
| K | E | E | R | T | U | D | E | R | E | H | T | A | G | J |
| N | D | O | P | N | N | R | K | D | R | E | S | S | E | D |
| F | O | R | S | A | K | E | N | Y | E | O | U | Z | T | O |
| K | R | R | M | V | C | N | I | T | T | T | E | I | I | O |
| H | U | M | O | R | O | S | V | S | H | B | S | R | R | L |
| L | O | R | D | E | L | O | E | L | E | A | R | S | I | B |
| C | F | N | G | S | L | E | S | L | A | V | J | J | P | A |
| U | Y | E | N | R | U | O | J | C | D | A | O | I | S | H |
| G | I | N | I | O | B | A | D | I | A | H | B | R | L | A |
| M | O | C | K | E | D | G | T | R | E | N | C | H | G | E |

ABRAHAM
AHAB
BAAL
BLOOD
BROOK
BULLOCK
BURNT
CARMEL
CAVE
CHILDREN
CLOUD
CUT
DRESSED
ELIJAH
ESCAPE
FORSAKEN
FOUR
GATHERED
GROVES
HUNDRED
ISAAC
ISRAEL
JEZEBEL
JOURNEY
KINGDOM
KISHON
KNIVES
LEAPED
LORD
MOCKED
OBADIAH
PROPHETS
RAIN
SACRIFICE
SERVANT
SPIRIT
TRENCH
WATER
COMMANDMENTS
ANSWERETH

After you find all the hidden words the left over letters spell out a Bible verse reading from the top left to the bottom right

___ _____ ____ __ _____
_______ _________ Psalm 9

http://biblewordgames.com

COPYRIGHT 2002 - BILL WALTERS PUBLICATIONS

## Children Congrates,You have done

1. Annlin Sophia Nelson
2. Angelin Sophia Nelson
3. Diniya Sunshin

*சிந்தனைக்கு.........*

## பின்பற்றுவதில் உறுதி

**"உம்மைப் பின்பற்றாமல் உம்மை விட்டுத் திரும்பி போவதைக் குறித்து, என்னோடே பேச வேண்டாம். நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்." (ரூத்.1:16).**

ரூத் நகோமியையும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரையும், பின்பற்றுவதில் மிகவும் உறுதியாக இருந்தாள். அவளுடைய சொந்த தேசம் மோவாப். மோவாபும், அம்மோனும் லோத்துவினுடைய மகள்கள் பெற்ற சந்ததியாகும். கர்த்தர் மோவாபியரையும், அம்மோனியரையம் வெறுத்தார். அப்படிப்பட்ட ஜாதியிலே வந்த, மோவாபிய பெண்ணான ரூத்துக்கு, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மேல் அனபு ஏற்பட்டது. கர்த்தரை உறுதியாய்ப் பின்பற்றினாள்.

ரூத்தினுடைய தீர்மானம் நம்முடைய உள்ளத்தை ஆச்சரியப்படுத்துகிறது. ஒரு வேளை இது கர்த்தரின் தெரிந்து கொள்ளுதலாக கூட இருக்கலாம். கர்த்தர் நம்மை எதற்காக தெரிந்து கொண்டார், எதற்காக நமக்கு பாவ மன்னிப்பையும், இரட்சிப்பின் சந்தேகசத்தையும் தந்தருளினார். இந்த இலவசமாகப் பெற்றுக் கொண்ட சிலாக்கியங்களை, நமமுடைய வாழ்கையில் வெளிக் கொணர்வோமானால் அல்லது பிரதிபலிப்போமானால்; அது நமக்கும் நம்மை சுற்றி இருக்கிறவர்கட்கும் ஆசீர்வாதமாக அமையும். அதைத்தான் ரூத் தன்னுடைய வாழ்கையில் அப்பியாசப்படுத்திக் காட்டினாள்.

நகோமியும், ரூத்தும் ஒருவரை ஒருவர் நேசித்தனர். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழும் வாழ்வு எப்படி இருக்கும் என்பதை நமக்கு மாதிரியாக வைத்துச் சென்றிருக்கின்றனர். நகோமி, ரூத்தை அழைத்துச் சென்ற இடம் எது என்று தெரியுமா? பெத்லகேம். "பெத்லகேம்" என்பதற்கு "அப்பத்தின் வீடு" என்று பொருள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு எனும் நமது முற்பிதாக்கள் சஞ்சரித்த இடம். தாவீதின் ஊரும், கிறிஸ்து பிறந்த இடமும் கூட அதுதான்.

எப்படி அன்று கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகளை நட்சத்திரம் பெத்லகேமுக்கு நேராக வழி நடத்தியதோ, அது போலவே ரூத்தும் நகோமியால் பெத்லகேமுக்கு நேராக வழி நடத்தப்பட்டாள். ஒரு பெரிய சந்ததக்குத் தாயாக உயர்த்தப்பட்டாள். இன்று கிறிஸ்து நம்மை பரம எருசலேமுக்கு நேராக வழி நடத்திக் கொண்டு வருகிறார். பூலோகத்திலே கிறிஸ்துவின் வழி காட்டுதலைப்

பின் பற்றுகிறவர்கள் பரலோகத்தில் என்றென்றும் கிறிஸ்துவோடு கூட அரசாட்சி செய்கிறவர்களாய் இருப்பார்கள் என்பதை வேதம் நமக்கு திட்டமாய் போதிக்கிறது. ரூத் நகோமியைப் பின் தொடர்து செல்லத் தீர்மானமாய் இருந்தது போல நாமும் கிறிஸ்துவைப் பின்பற்றவதில் உறுதியாய், தீர்மானமாய் இருப்போம். தேவன் நம்மை மேன்மைக்கு நேராக கொண்டு செல்வார்.

**"சகோதரரே, நீங்கள் என்னோடே கூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழி காட்டுகிற படி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்". (பிலிப்.3:17)**

*M. Nesamony*



# வேத வினா விடைப்போட்டி – ஜுன் - 2017

(**சங்கீதம் 1** முதல் **10** வரை)

1. நாவினால் இச்சகம் பேசினோர் யார்?
2. உணர்வடைய யாருக்கு உந்துதல் சொல்லப்பட்டது?
3. தேவனால் என்றும் மறக்கப்படாதோர் யார்?
4. இளைத்துப் போக செய்வது எது?
5. செழித்தோங்கிய மரத்துக்கு ஒப்பானவன் யார்?
6. கோபத்தின் மிகுதியால் செய்யக் கூடாதது எது?
7. தேவனைத் தேட தடை செய்வது எது?
8. ஆத்துமாவை அழிக்க விரும்புபவன் எதற்கு சமமானவன்?
9. இரட்சிப்பின் சொந்தக்காரர் யார்?
10. மனிதன் ஆட்சி செய்ய அருளப்பட்டது எது?

## மே மாத விடைகள்

1. 2 இராஜாக்கள் 20:12
2. 2 இராஜாக்கள் 14:7
3. 2 இராஜாக்கள் 22:4
4. 2 இராஜாக்கள் 16:3
5. 2 இராஜாக்கள் 19:35
6. 2 இராஜாக்கள் 25:10
7. 2 இராஜாக்கள் 14:2
8. 2 இராஜாக்கள் 21:13
9. 2 இராஜாக்கள் 15:5
10. 2 இராஜாக்கள் 18:7

**மே மாத வேத வினா விடைப்போட்டியின் விடைகள் எழுதியவர்கள்::**

1. திருமதி. ஜெயின் ராஜவேல்
2. திருமதி. பிப்லின் நெல்சன்.

# Birthday Celebrants in June - 2017

| Name | Date | Mobile No. |
|---|---|---|
| 03-06-2017 | Mr.Hebin Jose George | |
| 05-06-2017 | Mrs.Anna Jothi Yobu | 055 832 8701 |
| 06-06-2017 | Mr.Jaffrin Jerald Christopher | 050 666 8759 |
| 06-04-2017 | A.Esther Gerald | 055 701 1315 |
| 06-06-2017 | Mrs.Jinju Shamini Jim | 055 187 1741 |
| 08-06-2017 | Mr.Ujin Raj | |
| 09-06-2017 | Miss.Ansilin Suga Yobu | 055 832 8701 |
| 10-06-2017 | Mr.Saman Rajkumar | 05 322 7592 |
| 13-06-2017 | Mr.D.P.Moses | 050 265 4960 |
| 15-06-2017 | Mr.David Livingston | 050 543 2630 |
| 15-06-2017 | Mrs.T Rupa Helen | 056 899 3040 |
| 16-06-2017 | Mr.Ashok Daniel Prabakaran | 052 593 1927 |
| 16-06-2017 | Mrs.T.Rupa Helen | 052 593 1927 |
| 16-06-2017 | Master.Abhishek Rathinam | 052 962 5261 |
| 22-06-2017 | Mr.Melbin Paul | 056 394 1817 |
| 23-06-2017 | Mr.David Johnson Prem Kumar | 050 850 7652 |
| 23-06-2017 | Mr.Belfer John Sigamony | 055 730 9275 |
| 24-06-2017 | Mr.Ashok Prasad | 050 783 4649 |
| 27-06-2017 | Miss.D. Shiny Rebekah | 055 640 0635 |
| 30-062017 | Mr. M.Nesamony | 050 5237 237 |
| 30-06-2017 | Mrs.Sinduja Sathish Kumar | 055 814 6143 |

Celebrate the life that God
has given you by sharing
your joy with others and by
spreading His message of
love to everyone.

**HAPPY BIRTHDAY!**

# Wedding Anniversaries in June - 2017

| Name | Date | Mobile No. |
|---|---|---|
| 02-06-2017 | Mr.Mr.Ashok Daniel Prabakaran | 052 593 1927 |
| | Mrs.Princy Ashok | |
| 06-06-2017 | Mr.Ashok Prasad | 050 783 4649 |
| | Mrs.Eben A.Prasad | |
| 15-06-2017 | Mr.Deva Prakash | 055 317 1742 |
| | Mrs.Sheeba  Deva Prakash | |
| 15-06-2017 | Mr.D.Ezekil Prasanna Raj | 052 850 9598 |
| | Mrs.T.Rupa Helen | |
| 29-06-2017 | Mrs & Mr.Celin Jose | 055 790 5909 |

## துயரங்கள் - வாழ்க்கையையும் சுபாவங்களையும் ஒழுங்குபடுத்துகிறது

வாழ்க்கையில் மனிதன் படும் பாடுகள் வழியாகவும், பலவித கஷ்டங்கள் வழியாகவும் கடந்து செல்ல நேரிடும் போதுதான், தன்னுடைய வாழ்க்கையில் பல ஒழுங்குகளை கற்றுக் கொள்கிறான். அவன் பிரச்சனைகளற்ற, தொந்தரவற்ற, சுகமான நிலையில் வாழும்போது ஒழுங்கு நிலைகளைக் குறித்த கவலையற்ற மனிதனாகப் போய் விடுகின்றான். தன் மனதில் உணர்வுகளுக்கேற்றபடியும், மாம்சீக இச்சைகளுகேற்ற படியாகவும் வாழ்ந்து உயர்ந்த நெறிகளையும், இயல்புகளையும் உதாசீனம் செய்து விடுகின்றான். ஆம், துயரங்களற்ற சுகமான வாழ்க்கை மனிதனை ஒழுங்கற்ற மனிதனான மாற்றி விடுகின்றது.

பெரும்பாலும் மனிதன் துயரங்களற்ற, சுமுகமான சூழ்நிலைகளில் வாழ நேரிடும் போது அவனுடைய இதயத்தின் நினைவுகளும், அவனுடைய சுபாவ நிலைகளும், வரம்புகளுக்கு உட்படாமல், மாறுபாடுடையதாகவும், முரண்பட்டதாகவும் மாறிவிடுகின்றது. அவன் நல்ல குண இயல்புகளை உடையவனாக வாழ வேண்டிய அவசியத்தை உணராமல், தன் மனதிற்கேற்றபடி வாழ்வதிலேயே விருப்பம் கொண்டு செயல்படுகின்றான். அவன் செழிப்பான, கஷ்டமில்லா, நிலைமையில் தன்னைக் காண்பதால் தேவனுக்கு பயந்து, தன்னுடைய குணங்களையும், செயல்களையும் செவ்வையானவையாக வைக்க வேண்டியதின் அவசியத்தை உணராமல் போகிறான்.

சுகமான நிலையில், அவனை அகம்பாவம் நிறைந்தவனாகவும், தற்பெருமை உடையவனாகவும், யாருக்கும் தாழ்ந்து போகாத இயல்புடையவனாகவும் மேட்டிமையான சிந்தனைகளையுடையவனாகவும் மாற்றி விடுகிறது. அத்தகைய மனிதனின் அன்பு, தாழ்மை, பணிவு, பொறுமை, சாந்தம், இச்சையடக்கம், தயவு போன்ற மேலான சுபாவங்கள் காணப்படுவதில்லை.

அவனுடைய வாழ்க்கை முறைகளும், செயல்களும் கூட ஒரு நல்ல கட்டுக்கோப்பான, ஒழுங்கு நிறைந்த நிலையில் இருப்பதில்லை. அவன் மனம் போனபடி வாழ்வதில் பிரியப்படுகிறான். எது சரி, எது தவறு என்பதை சிந்திக்க வேண்டியதின் தேவையை உணராமல், தன் மாம்சீக உணர்வுகளுக்கு இசைந்து போய், தன் செயல்களால் செவ்வையற்ற மனிதனாக மாறிப்போய் விடுகிறான். தான் நினைத்தவைகள் நிறைவேறி விடுவதால், தனக்குத்தானே தேவன் என்ற நிலையில் செயல்படும் மனிதனாகிவிடுகிறான்.

இப்படிப்பட்ட ஒழுங்குநிலை தவறிய மனிதனுடைய சுபாவ நிலைகளை செவ்வையாக்கி, அவனுடைய வாழ்க்கையை ஒழுங்குபடுத்துகின்ற கருவிகளாக துயரங்கள் விளங்குவதுண்டு. ஏனென்றால் துன்ப நிலைகளை சந்திக்கும் போதுதான், தன்னுடைய உண்மை நிலையை மனிதன் உணர ஆரம்பிக்கிறான். உபத்திரவங்களைக் காண நேரிடும் போதுதான் தன்னுடைய பெலவீன நிலைகளை புரிந்து கொள்கின்றான். பெருமையும், மேட்டிமையும், நான் பெரியவன் என்ற ஆகாத உணர்வுகளும் பேரளவில் துன்பங்களால் கரைந்து போய் விடுகிறது. அப்பொழுதுதான் வாழ்க்கையில் சில குறிப்பிட்ட நியதிகளின் படி வாழ்வதற்கான மனப்பக்குவத்தைப் பெறுகிறான்.

தேவன் தம்முடைய மக்களின் சுபாவ நிலைகளை சரி செய்யவும், அவர்களை ஒழுங்கு மிகுந்த மக்களாக மாற்றவும், துயரமான சூழ்நிலைகள் வழியாக அவர்களை நடத்துகின்றார் என்பது உண்மை. பலவித பாடுகளின் பாதையில் தம்முடைய மக்களை நடக்க வைத்து, தமக்கேற்ற ஒழுங்கு மிக்கவர்களாக அவர்களை மாற்றுவதை வேதத்தில் பல இடங்களில் பார்க்கிறோம். இஸ்ரவேல் மக்களை பலவித துன்பமான பாதைகள் வழியாக நடத்தியது, அவர்கள் தேவ ஒழுங்குக்கு இசைந்து போகிற மக்களாக மாற வேண்டும் என்பதற்காகத்தான்.

சாலோமோன் ராஜா மிகுந்த ஞானமுடையவன். அறிவு வளம் அதிகமாக உடையவன். ஆனாலும் அவனுடைய வாழ்க்கையின் வழிகளும், அவன் வாழ்ந்த விதங்களும், தேவனுடைய ஒழுங்குகளுக்கு உட்பாடாமல், தாறுமாறானதான அமைந்தது. அவன் தேவனுடைய வேதம் கூறிய ஆலோசனைகளுக்குட்பட்டு தன் செயல் முறைகளை ஒழுங்கு

படுத்தவில்லை. அதற்கு முக்கிய காரணம் துன்ப சூழ்நிலைகளைக் காணாத, சுகமான ஒரு வாழ்க்கைதான் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் உபத்திரவங்களினால் அலசடிபட்ட யோசேப்பு, மோசே, தாவீது, தானியேல் போன்றோரின் வாழ்க்கையை கவனிக்கும் போது, அவர்களின் வாழ்க்கை ஒழுங்குகளை மையப்படுத்தி அமைந்திருந்ததைக் காண முடியும். ஆம், துயர் மிகுந்த பகுதிகள் மனிதன் தன்னுடைய வாழ்க்கையை சரி செய்ய வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்துகின்றன. துன்பத்தின் பகுதிகள் மனிதன் தன்னுடைய சுபாவ நிலைகளை செவ்வையாக்கிக் கொள்ள வேண்டிய கட்டாயத்தை அவனுக்கு கொடுக்கின்றது. உபத்திரவத்தின் வேளைகள் மனிதனை பற்றிக் கொள்ளும் போது தேவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தி, அவருக்கு பிரியமாக வாழ வேண்டியதின் தேவையை அவனுக்கு உருவாக்குகின்றன. எனவேதான் 119-ம் சங்கீதத்தை எழுதிய தேவனுடைய மனிதனாகிய தாவீது கீழ்க்கண்டவாறு கூறுகின்றான்.

**“நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன். இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்.**

**“நான் உபத்திரவப்பட்டது நல்லது. அதனால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்கிறேன்.** (சங்.119:67, 71)

மேற்கண்ட சங்கீதத்தில் வழி தப்பி நடந்த ஒரு மனிதனை, உபத்திரவங்கள் தேவனுடைய வார்த்தையைக் காத்துக் கொள்ளவும் கற்றுக் கொள்ளவும் தூண்டியதைக் காண்கிறோம். உபத்திரவங்கள் அல்லது துயரங்கள் ஒரு மனிதனை வேதத்தைக் கற்றுக்கொள்கிறவனாகவும் காத்துக் கொள்கிறவனாகவும் மாற்றி அவனுடைய வாழ்க்கையை ஒழுங்கு படுத்துமென்றால் அவ்விதம்

துயரப்பட்ட மனிதன் உண்மையில் பாக்கியவான் என்பதும், மிகுந்த மகிழ்ச்சிக்குரியவன் என்பதும் உண்மைதானே.

ஆம், துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். ஏனென்றால் துயரங்கள் அவர்களை தாறுமாறான வாழ்க்கையிலிருந்து விலக்கி, தேவன் விரும்புகின்ற ஒழுங்கு மிகுந்த மேன்மையான வாழ்க்கையை அமைக்க அவர்களுக்கு உதவுகிறது.

**Compiled**

# WORSHIP TIMIGS - JUNE 2017
## MAIN WORSHIPHALL
## OASIS HOSPITAL COMPOUND
## AL AIN

| | | |
|---|---|---|
| First & Third Fridays | 07.00 PM | Communion Service |
| Second & Fourth Fridays | 07.00 PM | Regular Service |
| Fifth Friday | 07.00 PM | Praise & Worship Service |
| Every Friday | 06.30 PM | Junior Church |